# காலிங்கராயனுக்கு கொ.மு.க மரியாதை

பவானி: விவசாயிகள் பயன்பெற பவானி ஆற்றை தடுத்து பவானியில் அணை கட்டி வாய்க்கால் வெட்டிய காலிங்கராயன் தினவிழா, வாய்க்கால் பாசனத்துக்கு அர்ப்பணிக்கப்பட்ட 732-வது ஆண்டு விழா கடந்த 18-ம் தேதி கொண்டாடப்பட்டது.

பவானி காலிங்கராயன் வாய்க்கால் அருகில் நடைபெற்ற விழாவுக்கு கொங்குநாடு முன்னேற்ற கழகத்தின் ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் துரைராஜா தலைமை தாங்கினார். விவசாய அணி செயலாளர் நல்லிசக்தி மாவட்ட இளைஞர் அணி செயலாளர் கணபதி, மாவட்ட தொண்டர் அணி நிர்வாகி மூர்த்தி, பவானி ஒன்றிய செயலாளர் ஸ்ரீதர், ஒன்றிய தலைவர் தமிழ்ச் செல்வன், நகர செயலாளர் ஸ்ரீகுமார், பவானி நகர தலைவர் மோகன், பொருளாளர் காவேரி சேகர், அம்மா பேட்டை ஒன்றிய செயலாளர் மாணிக்கம், பாபு, அந்தியூர் ஒன்றிய தலைவர் லோகநாதன், ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டு, காலிங்கராயன் உருவ படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

மேலும் காலிங்கராயன் அணையில் மலர் தூவி, காலிங்கராயனுக்கு நன்றி தெரிவித்தனர்.

முன்னதாக அணை கட்டிய காலிங்கராயனின் உறவினர்கள் தங்கள் மூதாதையருக்கு மரியாதை செலுத்தும் வகையில் அணையில் மலர்தூவியும், உருவப் படத்துக்கு மாலை அணிவித்தும் அஞ்சலி செலுத்தினர்.